# ஞானதீபம்

புத்தகம்—1 | 1893 ௵ வைகாசி ௴ 1 ௳ | இலக்கம்—10.

குருமார்களே!

இலங்கை முஸ்லிம்களெல்லோருக்கும் ஒருவருடத்துக்கிடையில் மகாபெரிய ஓர் நஷ்டமுண்டாகிவிட்டது, பிரகாசித்திலங்கிக் கொண்டிருந்த இரண்டு நக்ஷத்திரங்கள் மறைந்து விட்டன, இல்மிற் றேர்ச்சியடைந்த இரண்டு உலமாக்களை இழந்த துக்கமென்னும் மேகம் மூடிவிட்டது. மேன்மைபெற்ற செய்குஅப்துல்லா பாதீபு மவுலானா றகுமகுல்லாகு அவர்களுடைய வபாத்தின் துக்கம் தீருமுன், கீர்த்திபெற்ற கசாவத்தை செய்கு முகம்மது லெவ்வை ஆலிம் ஹாஜி றகுமகுல்லாகு அவர்கள் இந்த றமளான் மாதம் பிறை பத்தொன்பதாகியவெள்ளிக்கிழமை ஆகிறஞ்சேர்ந்த துக்கங் கொண்டாடுதற்காகிவிட்டது. செய்கு அப்துல்லா பாதீபு மவுலானா அவர்களுக்கு பாத்தினுடைய இல்மில் இலங்கையில் அல்லது இந்தியாவி லொப்புச்சொல்ல ஒருவரிருக்கிறார்களென்று நான் கேள்விப்படவில்லை, அவர்களொருமுறை ஒரு கித்தாபை வாசித்தால் அதிலுள்ள வாக்கியங்களும் சொற்கள் தானும் மனத்திற் பதிந்து விடத்தக்க புதுமையான ஞாபகத்தை அல்லாகுத்தாலா அருளியிருந்தான் வெகுகித்தாபுகள் கோர்வைசெய்திருக்கிறார்கள், அவர்கள் எமன் தேசத்திற் பிறந்த அறபியாயிருந்தாலும்தமிழ்ப்பாஷையில் வஉழு சொல்லும் பொழுது கேட்பவர்கள் பிரமித்து மஸ்துக் கொண்டவர்கள் போலாகத்தக்க வாக்கு வல்லபத்தைக் கொடுத்திருந்தான், அவர்களின் ஆயிரக்கணக்கான முரீதீன்களில் மிஸ்கீனாகிய நானுமொருவன், அவர்களின் பறக்கத்தால் அல்லாகுத்தாலா எங்களுக்கு நற்பதவியைத் தருவானாக. இவர்கள் மவுத்தாகி ஒருவருடஞ் செல்லமுன் கசாவத்தை முகம்மது லெவ்வை ஆலிம்சாகிபு அவர்களுடைய மவுத்தின் துக்கமுண்டாகிவிட்டது. அவர்கள் ளாஹிறுடைய இல்மில் மிகவுந்தேர்ச்சி யுடையவர்கள், இலங்கையிலெந்தக்கோட்டுத்தலங்களிலும் மார்க்க வழக்குகளுண்

டானுலும்அவ்ர்கள் பத்வாவையே ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், அறபிலொரு புலவர், அவர்கள் காயற்பட்டணத்தில் பத்துவருடம் வரையும் ஓதிமுடிந்தபின் நபிசல்லலாகு அலேகிவசல்லமவர்கள் பெயரில் கோர்வைசெய்தமவுலிதை அக்காலத்திலிருந்த தைக்காசாகிபுமுதலிய பெரியோர்கள் மிகவும் புகழ்ந்து அவர்கள் பைத்துகள் சதக்கத்துல்லா அப்பா அவர்களுடைய பைத்துகளுக்குச் சரியாயிருக்கின்றனவென்று புகழப்பட்டவர்கள், அல்லாகுத்தாலா அவர்களுக்கு மேலான பதவியைக் கொடுத்தருள்வானுக.

குருமார்களே!

தருமஞ் செய்வது பொருளைக்கொண்டுமட்டுமல்ல, சரீரப்பிரயாசத்தைக் கொண்டும் தயவான வார்த்தையைக் கொண்டும் கிருபையானபார்வையைக் கொண்டுஞ்செய்யலாம், தருமத்திற்கடித்தானம் இரக்கமாயிருக்கும், ஒரு மிஸ்கீனுடைய பரிதாப நிலேயைப்பார்த்து மனமிரங்கி அவனைக் கிருபையாய்ப் பார்த்துத் தயவான பேச்சாய்ப் பேசி ஒரு சதம் கொடுப்பது, மனமிரங்காமல் அலட்டுதலுக்காக அல்லது பெருமைக்காக அல்லது முகத்தாட்சனைக்காகப் பத்து ரூபா கொடுப்பதிலும் மேலாயிருக்கும். தருமஞ்செய்வதனுல் ஆகிறத்திற் கிடைக்கிற பெயரின்ப ஆனந்தத்தின் அச்சாரம் இவ்வுலகத்தில் அனுபவிக்கக் கூடியதாயிருக்கும். யாவருங் கீழ்மையாகவும் வெறுப்பாகவும் பாவிக்கப்படுகிற ஒரு ஏழையின் பரிதாப நிலேயைப் பார்த்து மனமிரங்கி அவனோடு அன்பாய்ப் பேசி அவனுடைய வருத்தங்களை நீக்கினவுடனே அந்த ஏழையின் கல்புருகித் துடிக்கும், சிலவேளை நன்றி யுணர்வு இருதயத்திற் பொங்கிக் கண்ணீராய்ச் சொரியும், அன்னேரத்தில் தருமஞ்செய்தவன் மனம் பூரித்து மலரும், இன்னவிதமென்று சொல்லக்கூடாத ஆனந்தமுண்டாகும், இதுதான் பெயரின்பம், இதை ஒவ்வொருவருஞ் சோதித்தறியலாம், எவ்வேளையும் மனத்தாழ்மை யுடையவனுய் ஏழைகள் மிஸ்கீன்கள் பெயரிலிரககம் கல்பில் நிறைந்தவனுய் அல்லாகுத்தாலா தந்தருளிய நிஉமத்துகளுக்கு சுக்றுசெய்து பிறர் வருத்தங்களையும் கஷ்டங்களையும் நீக்குதற்கு ஆசை கொண்டவனுய் நடந்து வரும்பொழுது பிறருக்குண்டாகிற வருத்தங்கள் தனக்குண்டாகிறதுபோலும் பிறருக்குண்டாகிற சந்தோஷம் தனக்குண்டாகிறது போலுமாகிவிடும். குரோதம் பொருமை முதலிய தீய குணங்கள் மாறி ஏக பட்சமுண்டாகிவிடும், இதுதான் றகுமானின் குணமகொள்வது. இக்குணங் கொள்பவனுக்கு தானென்றும் பிறரென்றுமுள்ள வித்தியாசம் குறைந்து, அஸ்லிலொன்றுயிருந்த தன்மைக்கு நெருங்குவான். தவ்ஹீதின் மக்காமுக்கு இதுவே இலேசானவழி, இக்குணங்களைக்கொண்

ளத்தெண்டிக்காது தன்னைப் பெரிதாக
வும் பிறரை இழிவாகவும் நினைப்பவர்
களும பொறாமை குரோதம் முதலி
ய தீயகுணங்களை யுடையவர்களும் உ
லக ஆசைகளில் மூழ்கினவர்களுமாகி
யவர்கள் தனித்தாவது, கூட்டமாகவா
வது இருட்டறையிலாவது, ஹயாத்து
முழுதும் இக்றுசெய்தாலும் தவ்ஹீது
டைய மக்காமிற் செல்லக்கூடாது.

நான் சொல்லிய காரியங்களை மிக
வுங் கவனிக்கவேண்டியது. பெண்
களே அல்லாகுத்தாலா உங்களுக்கு
இளநெஞ்சைக் கொடுத்திருக்கிறான், உ
ங்களுக்கு மிகுந்த நலவும் உயர்ந்த ப
தவியும் மிகவுமிலேசாய்ப் பெற்றுக்கொ
ள்ளக் கூடியதா யிருக்கின்றது. புருஷ
ர்களுக்கோ பொருள் சம்பாதிக்கும் வ
ருத்தங்களிலும் தொழிற்செய்யுங் கஷ
டங்களிலுஞ் சிக்கிப் பொய் மாறுபாடு
வஞ்சகம் முதலிய பாவங்களும், குரோ
தம் பொறாமை முதலிய தீய குணங்
களும் உலகத்திற் பலவிதமான மருட்
டுதல்களும் இடையூறுகளுமுண்டாவத
ற் கிடமுண்டா யிருக்கின்றது. நீங்க
ளோ இவைகளெல்லாவற்றையும் வி
ட்டு நீங்கி யிருக்கிறீர்கள், நீங்கள் நல
வில் உங்கள் மனதைத் திருப்பி உ
ங்கள் கல்பின் இரக்க முங்களைச் சு
ற்றியுள்ளவர்கள் மீதும் ஏழை மிஸ்கீ
ன்கள் மீதும் பரக்கச் செய்தும், அவ
ர்களுக்கு வருத்தங்கள் நோய்களுண்
டான தருணங்களில் அவைகளை விசா
ரணை செய்து பொருளைக்கொண்டும் ந
யந்த பேச்சுகளைக்கொண்டும் உபகார
ஞ்செய்தும் வருவீர்களேயானால் யாவ
ரும் உங்களைப் புகழவும் நீங்கள் ஹயா
த்தாயிருக்கும் பொழுதும் மவுத்தான
தின் பின்னும் துஆக்கேட்பதற்குமாகு
ம். இலங்கையில் சில ஊர்களில்மிகவு
ம் கெட்ட ஒரு வழக்க முண்டாயிருக்
கின்றது. ஒருவருக்கு நோயுண்டானா
ல் பெண்கள் கூட்டங் கூட்டமாய்ப்
போய் அங்கு விருந்து தின்னப் போ
கிறதே, அவர்களின் பரிதாபநிலைக்கி
மனமிரங்குதற்கு பதலாக அவர்களு
க்கு வருத்தத்தையுந் தொந்தரவையு
ஞ் செலவையுமுண்டாக்கிறதே, இதி
லுங் கீழ்மையான செய்கை வேறிருக்
கின்றதா? இந்த வழக்கத்தைக் காட்
டுவேடர்கள் தானும் பழிப்பார்களே,
இது தப்பென்று நினைக்க உங்களுக்
கறிவில்லையா? அந்த விடத்திற்போய்
தின்ன உங்களுக்கு வெட்கமில்லையா?
இது கொடுமையென்று நினைக்க உங்
ங்கள் மனதில் நீதியில்லையா? இப்படி
ப்பட்ட கெட்ட வழக்கங்களைத் தள்
ளிவிடுங்கள், நோயாளிகள் வீட்டுக்குப்
போனால் அவர்கள் துன்பங்களையும், அ
வர்கள் தேள்வையையும் விசாரித்து
உங்களாற் செய்யக்கூடியதைச் செய்
ய நாடுங்கள், உங்களிரக்கமென்னுந்
தயிலத்தாலவர்கள் மனப்புண்களை யா
ற்றத்தேடுங்கள், உங்கள் நபுசுகளையும்
குணங்களையும் அழகாக்கத் தெண்டி
யுங்கள், ரூபமழகாகவும் குணங்கெட்
டதாகவுமிருந்தால் எவரும் வெறுப்பா

ர்கள், ரூப மழகில்லாததாகவும் குண
ம் அழகாகவுமிருந்தாலெவரும் நேசிப்
பார்கள், சற்குண மெவர் மனதையு
ம் வசியமாக்கும், மின்னுகிறதாயிருந்தாலும்
ஸாவிதமான பெண்ணிருக்கிற வீடுதான்
யாவுக்கு சொர்க்கமாயிருக்கும், அவளு
டைய மகிழ்ந்த கண்களும் மலர்ந்தமுகமு
ம் இனிய பேச்சும் எவருக்கும் களிப்
பையுண்டாக்கி நேசத்தையுண்டாக்கு
ம், உடைகளும் நகைகளும் மிகுதியி
ருக்கின்றதென்பதைக் காட்டுதற்குப்
பெண்கள் அவைகளைத் தூக்கிச் சும
ந்து திரிவது மிகவும் மேன்மையான செ
ய்கையாயிருக்கும், அலங்காரமாயிரு
க்கத்தக்க உடைகளையும் நகைகளையு மணி
வதுசரிதான், ஒருவன் மௌனமாயிருந்து
அவன் மௌனத்தைப் பிறரிடஞ்
சொல்லித்திரிகிறது மேன்மையற்ற செ
ய்கை யென்பதுபோலவே, தங்களிட
மிருப்பதைக் காட்டுதற்காக நகைக
ளைத் தூக்கிச் சுமப்பது மேன்மையான
செய்கையா யிருக்கும், இதுவுமின்றியவ
ள செய்கை எவருக்கும் இல்லாததெ
ன்பது தெரிகிறது. சபைகளுக்குப்
போகும்பொழுது இரவல்வாங்கி நகை
களை நிறைத்துக் கொண்டுபோவதே,
இப்படிக் மேன்மையான செய்கைகளை நீக்
கித் தங்கள் குணங்களை அழகாக்கினா
ல் தங்கள் பிள்ளைகள் முதல் தங்களை
ச் சேர்ந்தவர்களும் அக்குணங்களைப்
பின்பற்றி நடப்பார்கள்.

ஆகையால் ஒவ்வொருவரும் தன்
வாயில் செல்வமும் மனப்பாக்கியமும்
ஆகிறத்தில் சற்பதவியுமடையவேண்டு
மானுல் தங்கள் உற்றார் பெற்றார் இ
னத்தார் அயலார் முதலிய சகல மு
ஸ்லிம்களுக்கும் செய்யவேண்டிய கட
மைகளை நிறைவேற்றவேண்டும். அந்த
க்கடமைகள் பணத்தைக்கொண்டும் த
ங்கள் சரீரத்தைக்கொண்டும், காலை
க்கொண்டும் கல்லைக்கொண்டும் மன்
னிப்புச் செய்கிறதுகொண்டும். துஆக்
கேட்கிறது கொண்டும் வாக்கு நிறை
வேற்றுகிறது கொண்டுமாயிருக்கும்.

ஒருவர் தேவையையறிந்தாலவர்கள்
கேட்குமுன் கொடுப்பதும், கொடுக்கு
ம்பொழுது சந்தோஷத்தை வெளிகா
ட்டி மலர்ந்த முகத்தோடும் தயவான
பேச்சோடும் கொடுக்கிறதும், பிறர் ஐ
புகளையும் குறைவுகளையும் கண்டால்
அவர்கள் சமூகத்திலும் அவர்களில்லா
த விடங்களிலும், அவைகள் தனக்கு
விளங்காததுபோலும் தெரியாததுபோ
லும் பேசாது நாவைப்பேணிக்கொள்ளு
கிறதும், பிறருடைய குற்றங்களையும்
பாவங்களையு மாராயத் தேடாதிருக்
கிறதும், பிறர் பழிப்பை யல்லது ஐ
புகளைக்கேட்க அல்லது பேசத் தனக்
கு விருப்பங் கொள்ளும்பொழுது அல்
லாஹுத்தஆலாவிடம் அதைவிட்டும் நீங்
க உதவி தேடுகிறதும், பிறருக்கு நல
வுகள் செல்வங்களுண்டானுல் அதை
யெடுத்துப்பேசிச் சந்தோஷங்கொண்
டாடுகிறதும், பிறர் குற்றங்கள் செய்தா
ல் மன்னிக்கிறதும், தான் குற்றங்கள்
பிழைகள் செய்தால் மன்னிப்புக் கே

ட்பதில் விஸ்தரித்து சொல்லுகிறதும், ஒருவன் பாவங்களைச் செய்துகொண்டிருந் [illegible] வெட்கமுண்டாகாமலும், அவன் மனம் வருந்தக்கொள்ளாமலும் சபிக்கிணையாய் உபதேசஞ் சொல்லுவதும், உறவினர்கள் சிநேகிதர்கள் முதலிய முஸ்லிம்களுக்கு அவர்கள் [illegible]யாத்தாயிருக்கும் பொழுதும், மரணத்தானதின் பின்னும் துஆக்கேட்கிறதும், சிநேகிதர்களையும் விருந்தாளிகளையும் சங்கையாயுபசரிக்கிறதும், இல்மு அல்லது செல்வம் அதிகப்பட அதிகப்பட தாழ்மையை அதிகப்படுத்தி நடப்பதும், தன் இருமையை எவர்கள் மீதும் பாரக்கச்செய்து சகலருடைய நேசத்தையும் அன்பையும் பெற்றுக்கொள்ளுகிறதுமாகிய சற்குணங்களைக்கொண்டால் இவ்வுலகத்திலும் ஆகிறத்திலும் பாக்கியமுடையவர்களாயிருப்பார்கள்.

குருமார்களே! நமது மார்க்கப்படிக்கு தருமஞ்செய்யும் விதிகளைச் சாடையாய்ச் சொன்னேன். நமது மார்க்கத்தின் கட்டளைகளை உண்மைகொண்ட மூமின்கள் பொருளைச் சேகரித்து வைப்பதை ஆசிக்கமாட்டார்கள், பொருளைத் தேண்டித்துத்தேடி தருமஞ்செய்வதில் செலவு செய்வார்கள், துன்யா ஆகிறத்துக்குப் பயிர்செய்யுந்தலமென்னும் [illegible] யுறுதிகொண்டவர்களாய் நடப்பார்கள், நீங்கள் தருமஞ்செய்தாலும் மிகுதியெல்லாம் வரிகள் சேர்த்து சபைகள் கட்டி அதற்கு உத்தி யோகஸ்தர்களை நியமித்துத் தருமங்களைக்கொடுக்கச் செய்து வருகிறீர்கள், ஏழைகளை மிகவும் மேன்மையாய்ப் பாவிக்கிறீர்கள் [illegible] ருக்குகிறீர்கள், [illegible] அவர்கள் அல்ல [illegible] விசுவாசமுடையவர்கள் [illegible] சங்கைக்குப் பாத்திரமானவர்களாயிருக்கிறார்கள், எங்களில் சாலிஹானவர்கள் அவுலியாக்கள் முதலிய பெரியோர்களும், உலகசம்பத்தைக் கருதாமல் ஏழைமையைத் தெரிந்து தாழ்மையை எடுத்தவர்கள். உங்களில் பாப்புமார்கள் முதல் பாதிரிமார்கள் வரையும் உலக செல்வத்திலும் பாக்கியங்களிலும் பெருமையிலும் வாழ்பவர்கள். ஆகையால் தரும விஷயத்திலும் நமது மார்க்கச் சட்டங்கள் உங்கள் மார்க்கச்சட்டங்களுக்கு மேலென்பது தெளிவாய் விளங்கும்.

நமது மார்க்கத்தின் நாலாவது அடித்தளம் நோன்பு. நோன்பு மூன்று பதவிகளுடையனவாயிருக்கும். முதலாவது அவாம்களின் நோன்பு அதாவது உண்ணாமலும் குடிக்காமலும் பெண்ணுடன் கூடாமலும் வயிற்றையும் பர்ஜையும் தடுத்துக்கொள்ளுகிறது, இரண்டாம் பதவியாகிறது கண் செவி நாவு கை கால் முதல் மற்றும் சரீரத்திலுள்ள சகல உறுப்புகளையும் பாவஞ்செய்யாது காப்பாற்றுகிறதாயிருக்கும். மூன்றாம் பதவியாகிறது துன்யாவுடைய எண்ணங்கள் சகலத்தையும் நீக்கி அல்லாஹு

த்தாலாவையும் ஆகிறத்தையும் நினைப்
பதில் கல்பைத்தரிபடுத்துகிறது. இது
தான் நபிமார்கள் ஒலியார்களுடைய
நோம்பாயிருக்கும். பாவவைக் கா
ப்பாற்றுகிறதாவது இதானவைகளிற்
மசலைப்பும் அல்லாகுத்தாலாவின் எ
ண்ணத்தை விட்டுப் பராக்காக்கும்
பொருள்கள் யாவையும் பார்க்காமலு
ம் கண்ணைப்பேணிக் கொள்ளுகிறது,
நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் நா
வைப்பேணுகிறதாவது வீண்பேச்சுப்
பேசுதல் கோள்சொல்லுதல் அபதூறு
பேசுதல் தூஷணம் பேசுதல் முதலிய
பாவங்களை விட்டும் பேணி அல்லாகுத்
தாலாவை திக்று செய்வதிலும் குறுவா
னோதுவதிலும் பாவிக்கிறதாயிருக்குமெ
ன்றுசொல்லியிருக்கிறார்கள், நபிசல்லல்
லாகு அலைகிவசல்லமுடைய காலத்தில்
இரண்டு பெண்கள் நோம்பு பிடித்துச்
சாயநேரமாகும் பொழுது பசி தாகம்
சகிக்காமல் மவுத்தாகிற நிலை
பரத்திலானார்கள், அப்பொழுது நபி
சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிட
த்தில் ஒரு மனிதன் வந்து அவர்களுக்
கு நோம்பை விடுதற்கு உத் ரவுகேட்
க. நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்க
ள் இரண்டு பாத்திரங்களைக்கொடுத்து
அவைகளிற் சத்தியெடுக்கும்படி ஏவி
னார்கள் அவர்களிலொரு பெண் ஒரு
பாததிரத்திலரைவாசி இரத்தமாகவும்
மற்றப்பெண்பச்சை இறைச்சாகவும் ச
த்தியெடுத்தாள். இதை மனிதர்கள் பா
ர்த்து ஆச்சரியமடைந்து நாயகமவர்க
ளிடம் கொண்டுபோய்க்காட்ட அவர்க
ள் இந்தப்பெண்கள் ஹலாலான தீனைத்
தின்று போம்பு பிடித்தபின், பிறர் ஐம்
புகள்பேசி நோம்பை விட்டார்கள், பிற
ர் ஐம்புகளைப்பேசுவது அவர்கள் மாமி
சத்தைத் தின்பதாயிருக்கும், ஐபு பேச
ப்பட்டவர்களுடைய மாமிசந்தான் இ
து என்று சொன்னார்கள். காதைக்கா
ப்பாற்றுகிறதாகிறது, பிறர் ஐபுகள் மு
தலிய கெட்டபேச்சுகளைக் கேளாதிருப்
பதாம், இதுபோலவே கை கால் முத
லிய மற்ற உறுபபுகள யாவையும் பாவ
ங்கள் செய்வதை விட்டும் காப்பாற்ற
வேண்டும். நோம்பாகிறது ஹலாலான
தீனைத்தின்னுகிறதை நிறுத்தி ஹறாமா
னவைகளைத் உட்கொள்ளுகிறதல்ல, வ
யற்றுக்குத் தின்பதை நிறுத்திமற்ற உ
றுப்புகளால் பாவமானவைகளைச் செய்
வதற்கு இமாம் கஸ்ஸாலி றகுமகுல்
லாகு ஒரு மாளிகையைக்கட்டி ஒரு
பட்டணத்தை உடைப்பதுபோலென்று
உவமைசொல்லி யிருக்கிறார்கள். றமு
ளான்மாதம் இபாதத்துக் குரிய மாத
மாயிருக்கும், நோம்பு பிடிக்கிறது இ
பாதத்துக்குதவியாகயிருக்கும்படிக்கே.
சரீர இச்சைகள் மிருகத்தின் குணங்
கள். இச்சைகளை விட்டும் நீங்கினவர்கள்
மலாயிக்கத்துகள். நோம்பு பிடிப்பதும
லாயிக்கத்துகளின் பதவியிலாகி அல்லா
குத்தாலாவின்பிக்கிறிலும் தஸ்பீஹிலும்
தரிபடுதற்கே, இவைகளைக் கருதாமல்
பசியிருப்பதுதான் தங்கள் கடமையெ
ன்று நினைத்துக்கொண்டு நேரத்தைப்
பாவங்களிலும் உறக்கத்திலும் அநேக
ர் போக்கிவிடுகிறார்கள். இதற்காக ந
பிசல்லல்லாகு அலைகிவசல்லம் எத்த

ளையோ பெயர்கள் நோம்பு பிடிக்கிறு
ர்கள், அவர்கள் நோம்பல்ல அவர்கள்
பசியுந் தாகமுமா இருப்பவர்களாயிரு
க்கும், அதாவது அவர்கள் ஹறுமான
வைகளைச் செய்வதுகொண்டு நோம்
பைத்திறகருகிறுர்கள், அவர்கள் ஹ
லாலான தீன் தின்பதை திறந்தி மனி
தரின் சதையைத் தின்னுகிறுர்கள்,
அபதூறு சொல்வது மனிதரின் சதை
யைத் தின்பதாயிருக்கும், இவர்கள் தா
ன் தங்களுறுப்புகளைப் பாவத்தைவிட்டு
ங் காப்பாற்றுதவர்களென்று திருவுளம்
பற்றியிருக்கிறுர்கள்.

நோம்பு பிடிக்கிறவர்கள் நோம்பு தி
றந்தவுடன் வயறு நிறையத் தின்பதும்
குற்றமாயிருக்கும், நோம்பு பிடிப்பது
தீனுடைய விருப்பத்தை யடக்குதற்கே
பகல் நேரத்திற் பசியை யடக்கிச் சூ
ரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் அணை
கட்டியிருந்த ஆறு அணையை யுடைத்
துப்பாய்ந்து வேகமா யோடுவதுபோல்
பகலிற் பற்பல இன்பமான தீன்களை
யும் சேகரித்து வைத்துக்கொண்டுநோ
ம்பு திறந்தவுடனே தாவி விழுந்து மூ
சி மூசித்தின்று வயற்றை நிரப்புகிற
து நோமபு பிடிப்பதின் கருத்திற்கு
மாறுயிருக்கும், நோம்பு பிடிப்பது தீ
னின் ஹவாவை யடக்குதற்கு, சிலநே
ரம் பசியிருந்து பின்பு அந்ததீன் ஹ
வாவுக்கிடங்கொடுத்தால் நோம்பின் க
ருத்திற்கு முழுதும் மாற்றமாயிருக்கு
ம். நோம்பின் கருத்தாவது ஷைத்தா
ன் சரீரத்தின் தத்துவத்தின் வழியாக
வேபாவத்திலிழுத்துவிடுகிறுன், அதை
க் குறைத்து இபாதத்தில் கல்பைத்
தரிபடுத்துதற்கே பகலிற் குறைந்த
தெல்லாவற்றையும் இரவில் நிரப்பிவி
ட்டால் நோம்பின் பலன்கிடைக்க வ
ழியில்லை ஒரு உலமா சொல்லியிருக்கி
றுாகள் எவ்வளவு பெயாகள் நோமபு
பிடிக்கிறவர்கள் நோமபல்லாதவர்களா
யிருக்கிறுர்கள், எவ்வளவு பெயர்கள்
தின்றுங் குடித்தும நோமபாயிருக்கிறு
ர்கள். இந்தப்பேச்சின் கருத்தாவது
அநேகர் நோம்பென்று பசியும தாக ம
ட்டிலிருந்து தங்கள் சரீர உறுப்புகளா
ல் பலவிதமான பாவங்களைச்செய்வார்க
ள், சிலர் தீனைத்தின்றுலும சருவத்தை
யடக்கி உறுப்புகளைப்பேணி நடப்பார்க
ளென்பதே. ஆனுலிந்தப் பேச்சைக்
கொண்டு தின்றுங்குடித்தும நோம்பின்
பலனைப்பெற்றுக் கொள்ளலாமென்றல்
ல, நோம்பின் கருத்தை விளக்குதற்கு
இவ்விதஞ் சொல்லியிருக்கிறுர்கள். ஆ
கையால் ஒவ்வொருவரும் றமுளானி
ன் மேன்மையை யறிந்து நோம்பின் க
ருத்து மனத்திற் பதிந்து அதைக்கொ
ண்டு நம்முடைய சருவத்துகளொடுங்கி
நபுசு சுத்தப்பட்டு அல்லாகுத்தாலாவு
டைய திக்றிலும பிக்றிலும மனஞ்செ
ன்று துன்யாவின் செல்வ பாக்கியங்க
ளையும ஆகிறத்தில் சொர்க்கலோகத்தி
ன் இன்பங்களையும விட்டு நோமபு பிடி
த்து றகுமானுடைய சமுகத்திற் சேரு
தலென்னு மவிலக்கானைக் கொண்டு
நோமபு திறக்க அல்லாகுத்தாலா உதவி
செய்வாளுக.

குருமார்களே! எங்கள் நோம்பின்
சட்டங்களையும் அதின் கருத்துகளையு
ஞ் சொன்னோம். எங்கள் நோம்பை
யும் உங்கள் நோம்பையும் ஒப்பிட்டு
ப்பாருங்கள், கிறிஸ்த்வர்கள் நோம்பு
பிடிப்பதைக் கேட்டவர்கள் சிரிக்காம
லிருக்கக்கூடுமோ? நீங்கள் நாற்பது நா
ள்வரையும் இறைச்சிவகைகளைத் தின்
னாமல் மற்றுந்தீன்கள் சகலத்தையுந்தி
ன்னுகிறீர்கள், இப்படித் தின்றுவிட்டு
நோம்பென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறீ
ர்கள், இது என்ன கருத்துக்கென்றால்
அதற்குங்களுக்கு மறுமொழி சொல்ல
க்கூடியதாயில்லை. தவ்றாத்து வேதத்
திலும் நாங்கள் பிடிப்பதுபோலவே
நோம்பு பிடிப்பதற்கு ஏற்பாடுசெய்தி
ருக்க, உங்கள் இஞ்சில்வேதப்படிக்கு
ம் ஈசா அலைஹிஸ்ஸலாம் நாற்பதுநாள்
நோம்புபிடித்திருக்க, நீங்களிறைச்சை
மட்டுந்தின்னாமல் மற்றும தீன்கள் சக
லத்தையும இருவிலாக்கள் தறிக்கத்தின்
றுவிட்டு, நாங்களுமநோம்புபிடிக்கிறோ
ம நாங்களும நோம்பு பிடிக்கிறோமெ
ன்றுசொல்வதுவேதசட்டங்களைக்கேலி
பண்ணுகிறதல்லவா? முஸ்லிமகளிருக்
கிற பட்டணங்களைப்பாருங்கள், இரவு
முழுதும் வணக்கத்தைகொண்டு சிறப்
பாக்கிறார்கள் தொழுகையிலும அல்லா
குத்தாலாவை திக்று செய்வதிலும தஸ்
பீகுசெய்வதிலுமஇரவை ஒளிவாக்குகிறா
ர்கள், கிழவர்முதல் குழந்தைவரையும
இதை ஆனந்தமாய்க் கொண்டாடுகிறா
ர்கள், ஹிந்துக்களுடைய விரதமும சில
மணிநேரம சோறு தின்பதை நிறுத்துவ
தேயன்றி வேறு நோமபைக்கொண்டு இ
ச்சை யடக்கம தெய்வவணக்கம தியான
மாகிய காரியங்களொன்றையுங் காணோ
ம, இவைகளை யோசித்துப் பார்த்தால்
மனமேற்றுக்கொள்ளத்தக்க சட்டங்க
ளும புகழுக்குரிய பிரமாணங்களுமெங்
தவேதத்தி லிருப்பதென்பது உங்களுக்
கே விளங்கும்.

குருமார்களே!

நமது மார்க்கத்தில் ஐந்தாமடித்தளமா
வது ஹஜ்ஜு. அதாவது:—இயல்புந் தகு
தியு முடையவன் அவனுடைய ஹயா
த்தி லொருமுறை மேன்மை பொருந்தி
ய மக்க நகருக்குப்போய் ஹஜ்ஜு செய்
கிறது. இந்த ஏற்பாடுபோல் உங்கள்
மார்க்கங்களிற் கிடையாது. இதினு
டைய கருத்தையும் உள்ளமையையும
நீங்களறிந்தால் இஸ்லா மார்க்கம் மிகவு
ம் உத்தமமான மார்க்கமென்பது உங்க
ளுக்கு விளங்கும்.

முதலாவது அறிந்துகொள்ள வேண்
டியது, ஒருவன் தன் சரீர இச்சைகளை
யும் தேட்டங்களையும் உலக இன்பங்க
ளையும் அடக்காமலும் கெடுதிகளை விட்
டொளியாமலும் தன்னது உசும்புதலிலும்
ஒடுங்குதலிலும் அல்லாகுத்தாலாவை
நினைத்தவனாயிருந்தாலேயன்றி அவனு
க்கு அல்லாகுத்தாலாவுடனே சேர்மா
னம் பெற்றுக்கொள்ளக்கூடாது. அதற்
காக முன்னுள்ள நபிமார்களின் காலங்க
ளில் துறவர்கள் உலக இன்பங்களையும்
மனிதர்களையும் விட்டு நீங்கிக் காடுமலை
களிற்சென்று ஆகிறத்தை நினைத்து அ
ல்லாகுத்தாலாவின் தோழமை யொன்
றையே ஆசித்து வணக்கஞ்செய்து வந்
தார்கள்.